DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)
Judicial Magistrate Court, Palacode.

| | | |
|---|---|---|
| STC/CC. No. | - | C.C.No. 74 /2017 |
| Deposition of Witness for | - | PW -1 |
| Name and Age | - | Maheswari (52) |
| Father / Husband Name | - | W/o.Ragavel |
| Occupation | - | Tailor |
| Village | - | Belarahalli |
| Taluk | - | Palacode |
| Caste | - | |
| Religion | - | |

நாள்.13.11.2019

அ.சா.1 சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் பேளாரஅள்ளியில் குடியிருந்து கொண்டு தையல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளும், மற்ற எதிரிகளும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். 30.04.2017ம் தேதியன்று நான் வீட்டில் இருந்தேன். ஆஜர் எதிரிகளும் மற்றும் அவர்களது குடும்பத்திலுள்ள அனைவரும் ஒன்று சேர்ந்து வந்து எனது மகனை என்னமோ கேட்டுக்கொண்டிருந்தார்கள் என்ன என்பது எனக்கு தெரியாது. கிருஷ்ணமூர்த்தி, தெய்வானை, சேகர், ஜெனார்த்தனன், இளங்கோ, மற்றும் எதிரிகளின் அக்காமார்கள் சேர்ந்து எனது மகனின் தலைமுடியை பிடித்து இழுத்து அடித்து காலில் எட்டி உதைத்து கண்டாரோலி பையா, தேவடியா பையா என்று கெட்டவார்த்தைகளால் திட்டினார்கள். நான் ஓடி போய் கேட்டதற்கு என்னையும் கண்டாரோலி பையா, தேவடியா பையா என்று கேட்டு தெய்வானையும், அவரது அக்கா இருவரும் சேர்ந்து என் தலை முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். எதிரிகளும் மற்றும் கிருஷ்ணமூர்த்தியின் அக்கா சாந்தி என்னுடைய வயிற்றில் உதைத்தார்கள். ஒட்டுமொத்தமாக சேர்ந்து என்னை உதைத்தார்கள். அதற்கு பிறகு கல்யாண குமார், சின்னமுத்துவையும் வீட்டிற்குள் தள்ளி கதவை சாத்திவிட்டோம். எதிரிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் சேர்ந்து அடித்ததால் பயந்து கொண்டு கதவை சாத்தியவிட்டேன். எதிரி ஜனார்த்தன் பக்கத்து வீட்டிலிருந்து கடப்பாறை, கல்லை எடுத்து வந்து கதவை உடைத்துவிட்டார்கள். அதன்பின்பு அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்து

Vade

தடுத்துவிட்டார்கள். எதிரிகள் தெய்வானை, கிருஷ்ணமூர்த்தி இருவரும் எங்களை பார்த்து நீங்கள் இருப்பது இரண்டு, மூன்று குடும்பம்தான் உங்களை இரவோடு, இரவாக கொழித்துவிடுவோம் என்று மிரட்டிவிட்டு என் மீது செருப்பை எடுத்து வீசினார்கள். நான் வீட்டிற்குள் சென்றுவிட்டேன். அவர்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியே வாடி பார்த்துக்கொள்ளலாம் என்று மிரட்டினார்கள். அதன்பிறகு அக்கம் பக்கம் இருந்தவர்கள் வரவே எதிரிகள் போய்விட்டார்கள். எனக்கும், எனது மகனுக்கும் மனஉளைச்சல் ஏற்பட்டு, எங்களை எதிரிகள் தாக்கியதால் அதிக காயம் ஏற்பட்டிருந்தது. நாங்கள் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். மூன்று நாட்கள் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தோம். போலீசார் வந்து விசாரித்தபோது நடந்த விபரத்தை சொன்னேன். எனது மகனுக்கு மனநலம் பாதிக்கப்பட்டு வீட்டிற்கு திரும்பி வந்த பிறகு அவரை நாராயண இருதாலயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதல்ல. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் தயாரித்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். வேறு எந்த ஆவணத்திலும் நான் கையொப்பம் செய்யவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Adobe